**D–1347**

| Sub. Code |
|---|
| **31911** |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2021.

First Semester

Tamil

இக்கால இலக்கியம்

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. 'தந்தையர் நாடு' எனப் போற்றிய இந்தியக் கவிஞர்?

2. விருந்தினர் விரும்பு ஊறுகாய் வகைகளை எழுதுக.

3. தொடக்க காலத்தில் புதுக்கவிதை எப்பெயர்களில் அழைக்கப்பட்டது?

4. 'ஆனந்த யாழை மீட்டுகிறாய்' என்ற புகழ்ப்பெற்ற திரைப் பாடலை இயற்றியவர்?

5. ஈரோடு தமிழன்பன் 'பச்சை நெருப்பு' என்று எதைக் குறிப்பிடுகின்றார்?

6. ஜெயந்தனின் 'நினைக்கப்படும்' எவ்விதழில் தொடராக வெளி வந்தது?

7. 'ஒரு தொழிலாளியின் டைரி' என்னும் சிறுகதையின் ஆசிரியர்?

8. இட்லிவடை என்னும் தலைப்பில் கட்டுரைகள் எழுதியவர்?

9. கரிசல் இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர்?

10. தனது இலட்சியப் படைப்புகளாக அனுராதா ரமணன் குறிப்பிடுவனற்றை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பாரதி வெளிப்படுத்தும் பாரத நாட்டின் பெருமைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மாமனாருக்கும் மாமியாருக்கும் தலைவி செய்த உதவிகள் யாவை?

12. (அ) அப்துல் ரகுமான் கவிதைகளில் தொன்மங்கள் பெருமிடத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) குறும்பாவில் புதுப்பா படைத்த ஈரோடு தமிழன்பனின் கவித்திறத்தை எழுதுக.

13. (அ) நா. முத்துக்குமாரின் உவமை உத்திகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) தாமரை கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள் – ஆராய்க.

14. (அ) அண்ணாவின் சமூகப் பார்வையைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தி.ஜானகிராமனின் 'சிலிர்ப்பு' சிறுகதையை விளக்கி வரைக.

15. (அ) கி.ராஜநாராயணனின் கரிசல் வட்டார வழக்கை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வண்ணதாசனின் அகமும் புறமும் வெளிப்படுத்தும் செய்திகளை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பாரதம் குறித்த பாரதியின் எதிர்ப்பார்ப்புகளை விளக்கி வரைக.

17. குடும்ப விளக்கு விவரிக்கும் தலைவியின் அன்றாட பணிகளை எழுதுக.

18. 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்' சிறுகதையின் அங்கதச் சுவையைக் கட்டுரைக்க.

19. சிறுகதை வரலாற்றில் ஜெயகாந்தனின் பங்களிப்பைப் புலப்படுத்துக.

20. அனுராதா ரமணனின் பெண்ணியப் பார்வையைக் கட்டுரைக்க.

———————

**D–1348**

**Sub. Code**
**31912**

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2021.

First Semester

Tamil

அற இலக்கியங்களும் சமய இலக்கியங்களும்

(CBCS – 2018-19 Academic Year Onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. திருக்குறள் நூலுக்கான சிறப்புப் பெயர்களில் இரண்டை எழுதுக.
2. வாய்ச்சொற்களுக்குப் பயன் இல்லாமல் போகுமிடம் எது?
3. ஊடல் உணர்ந்தார் பெற்ற பயன் யாது?
4. 'ஆற்றுணா வேண்டுவதில்லை' யாருக்கு?
5. ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ? எனக் கூறியவர்?
6. அப்பரின் இளமைக் காலப் பெயரைக் குறிப்பிடுக.
7. நரியைப் பரியாக்கிய சைவச் சமயக் குரவர்?
8. 'வேதம் தமிழ் செய்த மாறன்' யார்?
9. ஜீவகாருண்ய ஒழுக்கத்தை வலியுறுத்திய 'பெருந்தகையர்' யார்?
10. தேசிய விநாயகம் பிள்ளையின் 'ஆசிய ஜோதி' யாரைப் போற்றுகிறது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நிலம் ஆள்பவனுக்குரிய பண்புகளை வள்ளுவம் எங்ஙனம் விளக்குகின்றது?

(அல்லது)

(ஆ) மழையின் முக்கியத்துவத்தை வள்ளுவர் எடுத்துரைக்குமாற்றை எழுதுக.

12. (அ) 'நட்பாராய்தல்' குறித்து நாலடியார் கூறுமாற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'அறிவுடைமை' குறித்து பழமொழி நானூறு எங்ஙனம் எடுத்துரைக்கின்றது?

13. (அ) ஔவையார் பேசும் அறநெறிகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) கபில தேவர் உரைக்கும் இன்னா செய்திகளை விளக்குக.

14. (அ) திருஞான சம்பந்தர் 'கோளறு பதிகம்' பாடக் காரணம் யாது? விளக்குக.

(அல்லது)

(ஆ) 'வேங்கடத்தே குருகாய்ப் பிறக்க வேண்டும்' எனக் குலசேகராழ்வார் விரும்புமாற்றை விளக்குக.

15. (அ) தாயுமானவர் எவற்றை, 'பரிபூரணானந்தம்' என விவரிக்கின்றார்?

(அல்லது)

(ஆ) சுஜாதையின் கதையினைக் கவிமணி எங்ஙனம் எடுத்துரைக்கின்றார்?

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. துறவு மேற்கொண்டாரின் பெருமைகளை வள்ளுவர் வழி விரிந்துரைக்க.

17. கல்வியின் அவசியத்தை நாலடியார் எங்ஙனம் வலியுறுத்துகின்றனது? ஆராய்க.

18. காரைக்கால் அம்மையாரின் பக்தித் திறத்தைப் புலப்படுத்துக.

19. நம்மாழ்வாரின் திருவாய்மொழித் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

20. திருவிடை மருதூர் பெருமைகளைத் பட்டினத்தார் வழிக் கட்டுரைக்க.

———————

| D–1349 |
|---|

| Sub. Code |
|---|
| 31913 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2021.

First Semester

Tamil

இலக்கணம் 1 – தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணம்

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு விடையளிக்க.

1. நூன் மரபு – பெயர்க்காரணம் தருக.
2. சுட்டு மற்றும் வினா எழுத்துக்களை எழுதுக.
3. 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' – விளக்குக.
4. பல் இதழ் இயைந்து பிறக்கும் எழுத்திற்கு உதாரணம் தருக.
5. மொழிமுதல் குற்றியலுகரத்திற்கும் எடுத்துக்காட்டுத் தருக.
6. வேற்றுமை உருபுகளை எச்சொல் ஏற்கும்?
7. தொல்காப்பியம் குறிப்பிடும் மெய்ம்மயக்கம் எத்தனை வகைப்படும்?
8. இரண்டு திசைகள் தம்முள் புணரும்போது எந்தச் சாரியைப் பெறும்.
9. முள் + தீது – எவ்வாறு புணரும்?
10. 'நீட வருதல் செய்யுளுள் உரித்தே' – குறிப்புத் தருக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தொல்காப்பியம் பேசும் தமிழ் எழுத்துக்களின் வடிவம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) எழுத்துக்களுக்குரிய மாத்திரைகள் குறித்து விளக்கி வரைக.

12. (அ) தொல்காப்பியம் பேசும் சார்பெழுத்துகள் யாவை? விவரிக்க.

(அல்லது)

(ஆ) மொழியின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் எழுதுக.

13. (அ) எழுத்துக்களின் பொதுப் பிறப்பை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) எழுத்து, சொல் வகையால் புணர்ச்சி நான்காகும் தன்மையைப் புலப்படுத்துக.

14. (அ) தொகைமரபு கூறும் பொதுப்புணர்ச்சியை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'ணகர' ஈற்றுச் சொற்கள் புணரும் முறையினை விளக்குக.

15. (அ) தொண்ணூறு, தொள்ளாயிரம் ஆகிய சொற்களின் புணர்ச்சி விதிகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) புணரியல் நிலையிடை உணரத் தோன்றாச் சொற்கள் யாவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மொழிக்கு முதலாகும், ஈறாகும் எழுத்துக்களை எடுத்துக்காட்டுகளுடன் விரிந்துரைக்க.

17. சாரியைகளையும் அவற்றின் திரிபுகளையும் ஆராய்க.

18. உருபியல் உரைக்கும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

19. அகர, ஆகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியைத் தொகுத்தெழுதுக.

20. குற்றியலுகரப் பொதுப் புணர்ச்சி குறித்துக் கட்டுரைக்க.

———————

| D–1350 |
|---|

| Sub. Code |
|---|
| 31914 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2021.

First Semester

Tamil

இலக்கியத் திறனாய்வியல்

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours                                        Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. இலக்கியம் என்றால் என்ன?

2. கலைக் கலைக்காகவே – குறிப்பு வரைக.

3. பொருள் தரும் நிலையில் சொல்லிற்கான பண்புகள் எத்தனை வகைப்படும்?

4. விளக்க முறைத் திறனாய்வு – விளக்குக.

5. தமிழக வட்டார மொழிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

6. உள்ளுரை என்றால் என்ன?

7. ‘திறனாய்வுக் கலை’ என்னும் நூலை எழுதியவர்?

8. உரையாசிரியர் என அழைக்கப்படுபவர் யார்?

9. அமைப்பியல் கோட்பாட்டின் தந்தை எனப் போற்றப்படுபவர்?

10. வானம்பாடி இயக்கம் – குறிப்புத் தருக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) படைப்பாளனுக்கும் திறனாய்வாளனுக்குமுள்ள பொதுவான மனநிலையை விளக்குக.

(அல்லது)

(ஆ) திறனாய்வாளனுக்குரிய பண்புகள் குறித்து எழுதுக.

12. (அ) திறனாய்வின் பயன்கள் குறித்துத் தெளிவுப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தமிழின் திறனாய்வு வளர்ச்சியை விளக்கி வரைக.

13. (அ) நாவலுக்கும் சிறுகதைக்குமான வேற்றுமைகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தமிழில் புதுக்கவிதையின் வளர்ச்சி வரலாற்றை எழுதுக.

14. (அ) திறனாய்வின் ஐவகைப் பார்வைகள் – விளக்குக.

(அல்லது)

(ஆ) வரலாற்றியல் அணுகுமுறையைச் சான்றுகளுடன் விளக்குக.

15. (அ) உரையாசிரியர்கள் திறனாய்வாளர்களா? ஆராய்க.

(அல்லது)

(ஆ) இலக்கிய இயக்கங்களால் நிகழ்ந்த மாற்றங்களைப் புலப்படுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. திறனாய்வாளனுக்குரிய தகுதிகளைக் கட்டுரைக்க.

17. கற்பனையின் வகைகள் குறித்து விளக்கி வரைக.

18. திறனாய்வின் வகைகளைத் தொகுத்துரைக்க.

19. தமிழ் இலக்கிய வரலாற்றைக் கால அடிப்படையில் ஆராய்க.

20. நவீன இலக்கியங்களை மக்கள் இலக்கியங்கள் என்று ஏன் அழைக்கின்றனர்?

---

| D–1351 |
|---|

| Sub. Code |
|---|
| 31921 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2021.

Second Semester

இலக்கணம் 2 – தொல்காப்பியம் – சொல்லதிகாரம் – சேனாவரையம்

(CBCS 2018 – 2019 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. தகுதி வழக்காவது யாது?

2. ‘முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே’ – விளக்குக.

3. நான்காம் வேற்றுமை உருபுப் பொருளும் யாவை?

4. தடுமாறு தொழிற்பெயர் குறித்து எழுதுக.

5. பண்புப்பெயர் விளியேற்கும் முறை யாது?

6. சினை முதற்பெயரின் வகைகள் யாவை?

7. மாரைக் கிளவியின் இயல்பு யாது?

8. மன்னைச் சொல் எவ்வெப் பொருள் சார்ந்து வரும்?

9. ‘தட’ என்னும் உரிச்சொல் தரும் பொருள்கள் யாவை?

10. அன்மொழித்தொகை வரும் முறை யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள் – விளக்குக.

(அல்லது)

(ஆ) வினைவேறுபடும் பலபொருள் ஒரு சொல் குறித்து எழுதுக.

12. (அ) மூன்றாம் வேற்றுமை உருபும் பொருளும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உருபு மயக்கம் குறித்து விளக்குக.

13. (அ) அஃறிணைப்பெயர்கள் விளியேற்றலைச் சேனாவரையர் வழி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பாலறி வந்த உயர்திணைப் பெயர்கள் யாவை?

14. (அ) முன்னிலை வினைமுற்று குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) ஓகார இடைச்சொல் தரும் பொருள்கள் யாவை?

15. (அ) கடி என்னும் கிளவி தரும் பொருள்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) உம்மைத்தொடர் வகைகளை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவாக விடை தருக.

16. செப்பும் வினாவும் குறித்த வழு, வழுவமைதிகளை விளக்குக.

17. ஆகுபெயர் குறித்து ஒரு கட்டுரை வரைக.

18. எண்ணிடைச் சொற்கள் குறித்து விவரிக்க.

19. எஞ்சுபொருட்கிளவி குறித்துத் தொகுத்தெழுதுக.

20. சொல்லதிகார இயல்களின் பெயர் விளக்கம், வைப்பு முறை குறித்த சேனாவரையர் கருத்துகளை எடுத்துரைக்க.

———————————

| D–1352 |
|---|

| Sub. Code |
|---|
| 31922 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2021.

Second Semester

Tamil

தமிழர் பண்பாடும் கலையும்

(CBCS 2018 – 2019 Academic year onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. வைணவ சமயத்தின் முழுமுதற்கடவுள் யார்?

2. இறைத் தொண்டர்களுக்குச் சிறப்பளிக்கக் கூடிய சமயம் எது?

3. யாழ், பறை போன்ற இசைக்கருவிகளைக் கருப்பொருள்களுள் ஒன்றாகக் கூறும் நூல் எது?

4. சங்ககாலத்தில் இசைக் கலைஞர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

5. வெறியாடல் என்பதன் பொருள் தருக.

6. தற்காலத்தில் இயங்கி வரும் நாடக சபைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

7. தமிழ் நாடகத் தலைமையாசிரியர் எனப் போற்றப்படுபவர் யார்?

8. திருநாவுக்கரசர் காலத்தில் சிவனுக்கு 70 கோயில்கள் கட்டிய மன்னன் யார்?

9. சித்திரக்காரப்புலி என்றழைக்கப்பட்ட பல்லவ மன்னன் பெயர் தருக.

10. பல்லவர் காலத் தாமரைக்குள ஓவியம் எங்கு வரையப்பட்டுள்ளது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்.

11. (அ) தமிழர் பண்பாட்டிற்குச் சைவசமயம் ஆற்றிய பங்கினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழ்ப் பண்பாட்டில் இசுலாம் இடம்பெற்ற விதத்தினை விவரிக்க.

12. (அ) தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக் குறிப்புகளை விவரி.

(அல்லது)

(ஆ) சங்க கால இசைக்கருவிகள் குறித்து எழுதுக.

13. (அ) தமிழிசைச் சங்கத் தோற்ற வரலாற்றினை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) சங்க காலக் கூத்துகள் நான்கு குறித்து எழுதுக.

14. (அ) சங்கரதாஸ் சுவாமிகள் ஆற்றிய நாடகப் பணியினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) நாயன்மார்கள் காலக் கோயில்கள் குறித்து விவரிக்க.

15. (அ) சுதைச் சிற்பங்கள் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) நான்கு வகையான சிற்பங்கள் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க.

16. இந்திய நாகரீக வரலாற்றில் தமிழர் பண்பாட்டுக் கூறுகள் இடம்பெறும் விதத்தினை விரித்துரைக்க.

17. அழகுக் கலைகள் என்றால் என்ன? அதன் வகைகளை விவரிக்க.

18. சிலப்பதிகார காலத்தில் கலைகள் மலர்ச்சியுற்றிருந்தன என்பார் கூற்றை ஆய்க.

19. 19 ஆம் நூற்றாண்டின் தோன்றிய நாடக சபைகள் குறித்து எழுதுக.

20. பல்லவர்களில் சிற்பக்கலைத் திறனைச் சான்றுகளுடன் விவரிக்க.

———————

| D–1353 |
|---|

| Sub. Code |
|---|
| 31923 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2021.

Second Semester

Tamil

திறனாய்வுக் கோட்பாடு

(CBCS 2018 – 2019 Academic Year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. இலக்கிய வரலாற்றெழுத்தியல் என்றால் என்ன?

2. வரலாற்றியல் திறனாய்வு என்பது யாது?

3. இயங்கியல் பொருள் முதல்வாதம் – குறிப்பு வரைக.

4. ஒப்பிலக்கிய ஆய்வில் அடிக்கருத்து என்பதை விளக்கு.

5. உளவியல் திறனாய்வின் முக்கியத்துவம் யாது?

6. மொழிக்கிடங்கு என்றால் என்ன?

7. இலக்கியத்தில் தொன்மத்தின் இடம் யாது?

8. பூக்கோவின் ஆய்வுமுறை என்ன?

9. புலம்பெயர்வுக்கான காரணிகள் எவை?

10. பின்காலனித்துவ திறனாய்வு என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) புதுத்திறனாய்வின் கோட்பாடுகளை விவரி.

(அல்லது)

(ஆ) சசூரின் ஆய்வு முறையியல் யாது?

12. (அ) பெண்ணியத் திறனாய்வு என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) சமூகவியல் திறனாய்வின் கூறுகள் எவை?

13. (அ) ஒடியல் மனச்சிக்கலை விளக்குக.

(அல்லது)

(ஆ) குறிப்பின் – குறிப்பீடு பற்றி – குறிப்பு வரைக.

14. (அ) கதையாடல் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) அமைப்பியலில் இருந்து பின் அமைப்பியல் வேறுபடும் இடங்கள் எவை?

15. (அ) எடுத்துரைப்பியல் திறனாய்வு என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) பின்காலனித்துவ ஆய்வு முறையின் தோற்றப் பின்னணியை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விரிவாக விடையளிக்க.

16. இலக்கியக் கோட்பாடு – இலக்கியத் திறனாய்வு குறித்து ஒரு கட்டுரை வரைக.

17. மார்க்சியத் திறனாய்வின் அடிப்படைகளை விளக்குக.

18. சிக்மண்ட் பிராய்டின் ஆய்வு முறைகளில் இருந்து யூங், லக்கான் ஆகியோர் வேறுபடுமிடங்களை விளக்குக.

19. பின் நவீனத்துவத் திறனாய்வை விளக்குக.

20. புலம்பெயர் இலக்கியத் திறனாய்வின் போக்குகளை விவரிக்க.

———————————

| D–1354 |
|---|

| Sub. Code |
|---|
| 31924 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2021.

Second Semester

Tamil

கல்வெட்டியல்

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. கல்வெட்டின் வேறு பெயர்கள் யாவை?

2. இந்தியக் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ள மொழிகள் எவை?

3. கல்வெட்டுகள் வழி அறியப்படுபவனவற்றைக் குறிப்பிடுக.

4. வடமொழிக்கல்வெட்டுகளின் இருவகைகளை அவற்றின் உட்பிரிவுகளோடு எழுதுக.

5. சிந்துசமவெளிப் பகுதியில் கண்டறியப்பட்டவை எவை? சில உருவங்களைக் குறிப்பிடுக.

6. தமிழ் எழுத்து முறைகளின் தோற்றத்தை எவற்றைக் கொண்டு அறியலாம்?

7. புகளூர் கல்வெட்டுகள் குறிப்பிடும் சேரமன்னர்களுடைய மூன்று தலைமுறைகள் யாவை?

8. பாகிஸ்தானில் உள்ள சிந்துவெளி தொடர்பான இடங்கள் எவை?

9. வடபிராமி எழுத்து – குறிப்பு வரைக.

10. குறியீடு – இதனைக் கல்வெட்டியில் வழிநின்று விளக்குக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சிறந்த வடமொழிக் கல்வெட்டு எது? அதனலிடம்பெற்ற செய்திகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) கல்வெட்டுகள் எவ்வாறு எழுதப்படுகின்றன? விவரிக்க.

12. (அ) திருக்குற்றாலக் கல்வெட்டில் இடம்பெற்றுள்ள செய்திகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) திருவைகாவூர் கல்வெட்டு தரும் அரிய செய்திகள் யாவை?

13. (அ) அசோகர் கல்வெட்டின் சிறப்புக் கூறுகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) முதலாம் பராந்தகன் காலக் கல்வெட்டுகள் குறிக்கும் செய்திகளை விவரிக்க.

14. (அ) கல்வெட்டுகளின் இலக்கியத் தொடர்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) இந்தியப் பண்பாடுகளின் காலக்கணிப்பை விவரிக்க.

15. (அ) பிராமி எழுத்துவடிவம் குறித்து நீவிர் அறிவன யாவை?

(அல்லது)

(ஆ) குறியீடுகள் அமைப்பைச் சான்று தந்து விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விரிவாக விடையெழுதுக.

16. கல்வெட்டுகளும் மொழிநடையும் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

17. தமிழ்க் கல்வெட்டுகளின் ஆராய்ச்சி என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

18. கல்வெட்டுகள் காலவாரியாகப் பிரிக்கப்பட்ட நிலையினை ஆய்வு செய்க.

19. சிந்துவெளி நாகரிக எழுத்துக்ககளையும் அவற்றின் அமைப்பு, சிறப்பு ஆகியன குறித்தும் விளக்கியெழுதுக.

20. வட்டெழுத்துகள் தமிழ்நாட்டில் பயின்றுள்ள இடங்கள், அதன் வளர்நிலை, சான்றுகள், காலம் முதலியவற்றை விளக்குக.

———————

| D–1355 |
|---|

| Sub. Code |
|---|
| 31931 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2021.

Third Semester

Tamil

சங்க இலக்கியங்கள்

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. தோழி அறத்தோடு எவ்வாறு நிற்கிறாள்?
2. தலைவன் எவ்வாறு ஏறுதழுவினான் என முல்லைக்கலி கூறுகிறது?
3. வேட்கைப் பத்து, வேழப்பத்துகளுக்குப் பெயர்க் காரணம் கூறுக.
4. அகநானூற்றின் நெய்தல் பாடல்களின் அமைப்பு எவ்வாறு உள்ளது?
5. தலைவியின் துயரைப் பாலைப் பாடல்கள் எடுத்துரைக்கும் திறம் யாது?
6. செலவழுங்குவித்தல் என்றால் என்ன?
7. கண்டோர் கூற்று எவ்வாறு அமையும்?

8. பரிசில்கடாநிலை என்பது யாது?

9. பொருண்மொழிக் காஞ்சி உணர்த்தும் செய்தி யாது?

10. இயன்மொழி வாழ்த்து என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழ் அகமரபைக் குறிஞ்சிப் பாட்டின் வழி விளக்கு.

(அல்லது)

(ஆ) ஆய்ச்சியர் குரவை என்றால் என்ன?

12. (அ) முல்லைக்கலியில் தலைவன் தலைவியிடம் எவ்வாறு சூளுறைக்கிறான்?

(அல்லது)

(ஆ) நெய்தல் நில அகவாழ்வை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?

13. (அ) உடன்போக்கில் தலைவன் தலைவியிடம் கூறியதை நற்றிணை வழி விளக்கு.

(அல்லது)

(ஆ) வையை வெள்ளப் பெருக்கைக் கண்ட மக்களின் செயலைக் குறிப்பிடுக.

14. (அ) வல்லாண்முல்லை என்றால் என்ன? சான்று காட்டுக.

(அல்லது)

(ஆ) செல்வத்துப் பயனே ஈதல் என்பதை எவ்வாறு புறநானூறு உணர்த்துகிறது?

15. (அ) கணியன் பூங்குன்றனார் உணர்த்தும் கருத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) செங்குட்டுவனின் சிறப்பைப் பதிற்றுப்பத்தின்வழி விளக்கு.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவாக விடையளிக்க.

16. முல்லை வாழ்வியலும் ஏறுதழுவலும் குறித்து கட்டுரை வரைக.

17. தலைவன் – தலைவியரிடையே நிகழும் காதல்சார் உரையாடல்களை முல்லைக்கலி வழியாக எடுத்துரைக்க.

18. உள்ளுறை, இறைச்சிகளை ஐங்குறுநூற்றின்வழி விளக்குக.

19. வையையாற்றின் சிறப்பைப் பரிபாடல் வழியாக எடுத்துரைக்க.

20. புறநானூறு உணர்த்தும் அறக்கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

———————

| D–1356 |
|---|

| Sub. Code |
|---|
| 31932 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2021.

Third Semester

காப்பியங்கள்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க

1. இசையாசிரியனின் தகுதிகளாக சிலப்பதிகாரம் சுட்டுவன யாவை?

2. மணிமேகலைக் காப்பியம் கூறும் மூவகைக் கற்பு நிலைகளை எழுதுக.

3. அமுதசுரபி - குறிப்பு வரைக.

4. நந்தகோன் யார்? அவரின் மகள் யார்?

5. கண்ணப்ப நாயனாரின் ஊர் எது? அதன் வளமையை எழுதுக.

6. அசுவத்தாமன் யார்? அவன் திறம் எத்தகையது?

7. தேம்பாவணி ஆசிரியர் உவமைநயம் மிக்கவர் என்பதற்கு இரு சான்றுகள் தருக.

8. நபிகள் நாயகம் மேற்கொண்ட சிறந்த அறங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

9. நளவெண்பா குறிக்கும் அன்னம் எத்தகையது?

10. வளையாபதி ஆசிரியர் அருகதேவனை எங்ஙனம் வணங்குகிறார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் நடந்தது எங்ஙனம்?

(அல்லது)

(ஆ) காவிரி ஆற்றைப் பற்றி யாழில் இசைத்துப் பாடப்பெற்றவை யாவை?

12. (அ) மணிமேகலா தெய்வத்தின் சிறப்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆபுத்திரனுக்கு இந்திரன் செய்த இடையூறுகள் எவையெவை?

13. (அ) வேடர் நிரை கவர்ந்தது எங்ஙனம்?

(அல்லது)

(ஆ) கண்ணப்பர் வாழ்ந்த மலையின் வளம் எத்தகையது?

14. (அ) சல்லியன் கர்ணனது செருக்கடங்கப் பேசியது எங்ஙனம்?

(அல்லது)

(ஆ) சூசையைச் சந்தித்த முதியவன் - இருவரின் உரையாடற் சிறப்பை விளக்குக.

15. (அ) தருமனின் மனத்துயரம் எத்தகையது? ஏன் துயரமடைந்தார்?

(அல்லது)

(ஆ) இடபத்திற்கும் உமறுகத்தாப்பிற்கும் இடையே நடந்த போராட்டம் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றக்கு விரிவான விடை தருக.

16. இந்திரவிழாவும், புகார் நகர அழகும் பற்றி விரிவாக எழுதுக.

17. மணிமேகலை பிச்சை புக்க நிகழ்வை விளக்குக.

18. கோவிந்தையார் திருமண விழாவை விளக்கி வரைக.

19. கண்ணப்பரின் பக்தித்திறத்தை விவரிக்க.

20. நளனுக்கும் தமயந்திக்கும் நடந்த சுயம்வரக் காட்சியை வர்ணிக்க.

**D–1357**

**Sub. Code**
**31933**

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2021.

Third Semester

சிற்றிலக்கியங்கள்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours

Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க

1. பரணி இலக்கியங்களுக்குப் பெயரிடப்படும் முறைகுறித்து எழுதுக.

2. செயங்கொண்டார், காவிரியுடன் மகளிரை ஒப்பிடும் பாங்கினைச் சுட்டுக.

3. 'குலோத்துங்க சோழன் உலா' நூலமைப்பினைக் குறிப்பிடுக.

4. 'கலம்பகம்' பெயர் காரணம் தருக.

5. தமிழ்விடுதூது குறித்து எழுதுக.

6. 'விடேல் விடுகு' என்றால் என்ன?

7. சந்திரன், துஞ்சாதிருக்கும் அச்சத்திற்கான காரணம் யாது?

8. 'புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து' - விளக்குக.

9. ‘கதவு திறந்திடுமின்’ என எச்சரிப்பதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

10. தஞ்சைவாணனின் கொடையும் வீரமும் குறித்து எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கலிங்கப்போர், கொண்ட மகளிர் குறித்த கடைதிறப்புப் பாடற்கருத்துகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) குலோத்துங்கனின் சைவத்தொண்டினை, உலாவழிப் புலப்படுத்துக.

12. (அ) நந்திக் கலம்பகத்தில் இடம் பெறும் ஊசல் மற்றும் செவிலியர் கூற்று குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நந்திக் கலம்பக்கதில் காணும் ‘வெறிவிலக்கல்’ பாடல் கருத்தை விளக்குக.

13. (அ) தமிழ்விடுதூது, பெண்டிர்நலம் பெறத் தமிழ் செய்த நன்மைகளாகச் சுட்டுவன யாவை?

(அல்லது)

(ஆ) குறத்தி, மலை வளம் குறித்து எடுத்துரைப்பனவற்றை எழுதுக.

14. (அ) மீனாட்சியம்மையின் சந்திரன் மீதான பெருங்கருனைத் திறம் குறித்த விளக்குக.

(அல்லது)

(ஆ) மீனாட்சியம்மைக்கும் சந்திரனுக்குமான ஒப்புமைக் கூறுகளைக் குறிப்பிடுக.

15. (அ) தோழியின் ‘முன்னுற உணர்தல்’ குறித்த பொய்யாமொழிப்புலவரின் கருத்துகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) முத்தொள்ளாயிரத்தில் இடம் பெறும் யானை குறித்த செய்திகளை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவாக விடையளி.

16. காட்டின் வறட்சி நிலை, செயங்கொண்டாரால் எவ்வாறெல்லாம் வருணிக்கப்படுகின்றது?

17. நந்திக்கலம்பகத்தில், தோழி கூற்றாக இடம்பெறும் பாடற்கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

18. தமிழின் தனிச்சிறப்பைத் தமிழ்விடு தூதின் வழி எடுத்துரைக்க.

19. எழுபருவ மகளிர் தம் மனநிலையைக் குலோத்துங்கன் உலாவழி விவரிக்க.

20. முத்தொள்ளாயிர இலக்கிய நயங்களை விளக்கி வரைக.

| D–1358 |
|---|

| Sub. Code |
|---|
| 31934 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2021.

Third Semester

தமிழ் – முதுகலை

இலக்கணம் 3 – தொல்காப்பியம் – பொருளதிகாரம் – இளம்பூரணம்

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours                                        Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. முதல்பொருள் குறித்த தொல்காப்பிய நூற்பாவை எழுதுக.

2. உள்ளுறை உவமம் எவ்வாறமையும்?

3. உழிஞைத் திணையின் இலக்கணம் கூறுக.

4. பாசறையின் இரு வகைகளைச் சுட்டுக.

5. தலைவியின் இயல்புணர்த்துக.

6. கற்பெனப்படுவது யாது?

7. பார்ப்பார்க்குரிய கிளவிகள் யாவை?

8. எல்லா உயிரும் இன்பம் பெற, தொல்காப்பியம் கூறும் வழி யாது?

9. சீரெனப்படுவது யாது? சான்று தருக.

10. புலனென்னுஞ் செய்யுள் வனப்பு குறித்து எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கைக்கிளையின் இலக்கணம் கூறி விளக்குக.

(அல்லது)

(ஆ) உழிஞைத்திணையையும், துறைகளையும் தொகுத்தெழுதுக.

12. (அ) வாகைத் திணையின் பாகுபாடுகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பாடாண் திணையின் துறைகளை விளக்குக.

13. (அ) அன்பொடு புணர்ந்த் ஐந்திணைகளில் குறியிடுதல் எங்ஙனம்?

(அல்லது)

(ஆ) கற்பின் இலக்கணத்தைத் தொல்காப்பியர் வழிநின்று விளக்குக.

14. (அ) கூத்தர்க்குரிய திறன்களை எழுதி விளக்குக.

(அல்லது)

(ஆ) உவம உருபுகள் குறித்தெழுதுக.

15. (அ) அடிகள் குறித்த தொல்காப்பிய நூற்பாக்களைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) வண்ணம் என்பதைப் பொருளதிகாரம் வழிநின்று விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவாக விடையளிக்க.

16. பிரிவு குறித்த அகத்திணையியல் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

17. காஞ்சித்திணையும் துறைகளும் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

18. கற்புக்காலத்தின் தலைவன் கூற்று நிகழ்த்தும் இடங்களை நூற்பா எழுதி விளக்குக.

19. எண்வகை மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியர் வழிநின்று விவரிக்க.

20. செய்யுளுறுப்புகளை எழுதிச் சான்றுடன் விளக்குக.

---

| D–1359 |
|---|

| Sub. Code |
|---|
| 31941 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2021.

Fourth Semester

Tamil

ஒப்பிலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. 'Comparative Literature' என்னும் சொல்லாடலை உருவாக்கியவர் யார்?

2. ஒப்பிலக்கியத்தின் பயன்களுள் இரண்டனைச் சுட்டுக.

3. வடமொழி இராம காதையைத் தமிழில் தந்தவர் யார்?

4. சங்க இலக்கியங்களைக் கிரேக்க வீரயுகப் பாடல்களுடன் ஒப்பிட்ட அறிஞர் யார்?

5. தாக்குறவுக் கொள்கை என்றால் என்ன?

6. தேசிய இலக்கியம் - வரையறுக்க.

7. இலக்கிய வகைமை மூலக்கூறு என்றால் என்ன?

8. இலக்கியத்தின் 'தழுவல்' என்பது யாது?

9. இலக்கியத்தை வரலாற்றுப் பூர்வமாக அணுக வலியுறுத்திய கொள்கை எந்நாட்டார்க்குரியது?

10. கூர்தலறத் கோட்பாட்டை உருவாக்கியவர் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) மேலை நாடுகளில் ஒப்பிலக்கிய ஆய்வின் தோற்றத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கியத்தின் அடிப்படைப் பண்புகளை விளக்கியுரைக்க.

12. (அ) அடிக்கருத்தியல் கொள்கையைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) இணைநிலைக் கொள்கையை விளக்குக.

13. (அ) ஒப்பிலக்கிய ஆய்வில் பிரெஞ்சு நாட்டாரின் கொள்கைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'உலக இலக்கியம்' என்னும் கருத்தியல் குறித்தெழுதுக.

14. (அ) இலக்கியத்தின் வரலாறு என்பது குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வரலாறு எழுதியல் குறித்த அறிஞர் கருத்துக்களை விளக்குக.

15. (அ) இலக்கியமும் அறிதலும் குறித்த கொள்கையை விளக்குக.

(அல்லது)

(ஆ) சார்பியல் கோட்பாட்டை இலக்கியத்துடன் பொருத்தி விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.

16. தமிழில் ஒப்பிலக்கியத் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரைக்க.

17. ஒப்பிலக்கிய ஆய்வுகளின் வளர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

18. இலக்கிய வகைமைக் கோட்பாட்டை விளக்கியுரைக்க.

19. ஒப்பிலக்கிய ஆய்வில் மொழிபெயர்ப்பு பெறுமிடத்தை விளக்குக.

20. உளவியலும் இலக்கியமும் குறித்து விளக்கியெழுதுக.

———————

| D–1360 |
|---|

| Sub. Code |
|---|
| 31942 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2021.

Fourth Semester

பண்பாட்டு மானிடவியல்

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு விடையளி.

1. மானிடவியல் சார்ந்த கருத்துக்களை முதன்முதலில் சிந்தித்தவர் யார்?

2. ஸ்காட்லாந்து குழுவில் இடம்பெற்ற அறிஞர்களில் இருவர் பெயரைக் குறிப்பிடுக.

3. மனிதனை முழுக்க முழுக்க உயிரியல்சார் நிலையில் ஆராயக்கூடிய மானிடவியல் பிரிவு எது?

4. சமுதாய மொழியியல் (socio-linguistics) என்றால் என்ன?

5. டாரஸ் நீர்ச்சந்தி ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டவர்கள் யார் யார்?

6. மானிடவியலில் ‘குடிவழக்கு’ என்பது எதனைக் குறிக்கின்றது?

7. உலகிலுள்ள அனைத்துப் பண்பாடுகளையும் பொதுவான முறையில் எச்சொல்லால் குறிப்பிடலாம்?

8. இனக்குழுச் சாதி முறைக்கு எடுத்துக்காட்டு தருக.

9. நால்வகை வருண அமைப்புகளைச் சுட்டுக.

10. Ethnographic என்பதன் தமிழாக்கம் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

<u>ஒரு பக்க</u> அளவில் விடையளி.

11. (அ) மானிடவியலில் சாக்ரடீஸின் பங்களிப்பை எழுதுக.

(அல்லது)

(ஆ) புத்தாய்வுக் காலம் என்றால் என்ன? விளக்குக.

12. (அ) "இனவியல் என்பது மானிடவியலின் படிநிலை"— இக்கூற்றை மெய்ப்பிக்க.

(அல்லது)

(ஆ) களப்பணியில் தரவுகளைப் பெறும் வழிமுறைகளை எழுதுக.

13. (அ) 'மனிதச் சூழலியல்' என்பது குறித்து மானிடவியல் அறிஞர்கள் யாது கூறுகின்றனர்?

(அல்லது)

(ஆ) மானிடவியல் ஆய்வுகளில் தரவுகளை ஒப்பிடுதல் பற்றி விவரி.

14. (அ) பழங்குடி மக்களின் பண்பாட்டு மாற்றத்திற்கான காரணிகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) பண்பாட்டின் அமைப்புமுறை பற்றி நீவிர் அறிவன யாவை?

15. (அ) இனக்குழுச் சாதிகள் பற்றி மானிடவியலார் முன்வைக்கும் சிந்தனைகள் யாவை?

(அல்லது)

(ஆ) படிமலர்ச்சிக் கொள்கை என்றால் என்ன? விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.

16. மானிடவியலின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை வரைக.

17. உடல்சார் மானிடவியல் பற்றி நீவிர் அறிவனவற்றைத் தொகுத்துரைக்க.

18. பண்பாட்டின் உட்கூறுகளைப் பட்டியலிட்டு விளக்குக.

19. "மானிடவியலில் பண்பாட்டுப் பொதுமை" – என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

20. தமிழகப் பழங்குடிகளின் இனக்குழு மற்றும் சாதிக் கொள்கைகளை விவரி.

---

**D–1361**

**Sub. Code**
**31943**

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2021.

Fourth Semester

Tamil

தமிழக வரலாறும் பண்பாடும்

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. தொல்காப்பியப் பாயிரம் சுட்டும் தமிழக எல்லைகள் எவையெவை?

2. 'ஐம்பெருங்குழு' – குறிப்பு வரைக.

3. குடவரைக் கோவில் முறையினை உருவாக்கிய மன்னன் யார்?

4. பல்லவர் காலக் கலைகளின் கொடுமுடி எனப் புகழப்படும் கோவில் எது? எம்மன்னனால் கட்டப்பட்டது?

5. மெய்க்கீர்த்திகள் என்றால் என்ன? இவ்வழக்கத்தினை உருவாக்கிய சோழ மன்னன் யார்?

6. மூன்றாம் குலோத்துங்க சோழனின் திருப்பணிகள் இரண்டினைச் சுட்டுக.

7. பாளையப்பட்டு ஆட்சி முறையின் முக்கியப்பணிகள் யாவை?

8. தமிழக நாடக வரலாற்றில் திருப்புமுனை உண்டாக்கிய இருவரைக் குறிப்பிடுக.

9. சோழர்காலச் சிற்பக்கலைத் திறனுக்குச் சான்றுகள் இரண்டினைச் சுட்டுக.

10. மதுரையைச் சிறப்பிக்கும் ஆறு எது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) பழந்தமிழக நிலப்பரப்பு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சங்க நூல்கள் தரும் வேங்கடமலை பற்றிய குறிப்புகளைக் கூறுக.

12. (அ) தமிழகத்தில் மராட்டியர் கால ஓவியங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சோழர் கால வரலாற்றை அறிய உதவும் சான்றுகள் எவையெவை?

13. (அ) முதலாம் மகேந்திரவர்ம பல்லவனின் கலைத் தொண்டினை எழுதுக.

(அல்லது)

(ஆ) "தஞ்சைப் பெரிய கோவில்" சிற்பக்கலைத் திறனுக்குச் சான்றாக விளங்குமாற்றினைக் கூறுக.

14. (அ) தமிழர் பண்பாட்டில் பௌத்தமதச் செல்வாக்கு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இசுலாமியரின் தமிழ்ப்பணி பற்றிக் கூறுக.

15. (அ) சோழர்கள் சிற்பக்கலையில் ஏற்படுத்திய மாற்றங்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) 'நொய்யல் நதிக்கரை வளர்த்த நாகரிகம்' குறித்து விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க.

16. வரலாற்றுக்கு முந்தைய காலத் தமிழகத்தின், மூவகைப் பிரிவுகளை விளக்கியுரைக்க.

17. சங்கம் இருந்தமைக்கான இலக்கியச் சான்றுகளை எடுத்துரைக்க.

18. சங்க கால ஆட்சிமுறை குறித்து விவரிக்க.

19. பண்டைத் தமிழரின் கல்விநிலை குறித்து விரித்துரைக்க.

20. பல்லவர் காலக் கட்டடக் கலைப்பாணியினை விளக்கியுரைக்க.

———————

| D–1362 |
|---|

| Sub. Code |
|---|
| 31944 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2021.

Fourth Semester

Tamil

ஆராய்ச்சி அறிமுகம்

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. ஆய்வாளருக்குரிய தகுதிகள் இரண்டைக் குறிப்பிடுக.
2. 'ஆராய்ச்சி' என்பதன் பொருள் யாது?
3. ஆய்வு அணுகுமுறைகள் இரண்டினைச் சுட்டுக.
4. ஆய்வு உத்திகள் யாவை?
5. நேர்காணலின் வகைகளைக் கூறுக.
6. கள ஆய்வு என்றால் என்ன?
7. முன்னோடி ஆய்வு என்பது யாது?
8. அடிக்குறிப்பில் இடம் பெறும் செய்தியை எழுதுக.
9. துணை நூற்பட்டியலில் எவையெல்லாம் இடம் பெறும் என்பதைச் சுட்டுக.
10. குறியீடுகள் என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுக்கும் வழிமுறைகளைப் பற்றி விவரி.

(அல்லது)

(ஆ) ஆய்வுச் சிக்கல் பற்றி ஆராய்க.

12. (அ) 'நேர்காணல்' ஆய்வுக்கு உறுதுணை புரியும் விதத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) உற்று நோக்கல் ஆய்வு குறித்து ஆராய்க.

13. (அ) ஆய்வேட்டில் இயல்களின் அமைப்பு, ஆய்விற்குச் செம்மைப்படுத்தும் தன்மையை விவரிக்க.

(அல்லது)

(ஆ) கள ஆய்வில் பின்பற்றப்படும் நெறிமுறைகள் குறித்து ஆராய்க.

14. (அ) ஆய்வுக்கு நூலகப் பயன்பாட்டின் இன்றியமையாமை குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) ஆய்வில் தரவுகள் சேகரிக்கும் பல்வேறு முறைகளை விவரிக்க.

15. (அ) ஆய்வேட்டில் மேற்கோள் காட்டும் முறைமை பற்றி ஆராய்க.

(அல்லது)

(ஆ) ஆய்வேட்டில் பின்னிணைப்பில் இடம்பெறும் செய்திகள் பற்றி விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவாக விடையளிக்க.

16. ஆய்வாளருக்குரிய தகுதிகள் பற்றி ஆராய்க.

17. ஆய்வு அணுகுமுறைகளில் சிறப்பை விளக்குக.

18. ஆய்வேட்டின் உருவாக்கம், ஆய்வேட்டின் அமைப்பு குறித்து விவரிக்க.

19. ஆய்வில் கருதுகோளின் தேவை மற்றும் கருத்துகோள் நிறைவேற்றம் குறித்து விளக்குக.

20. ஆய்வில் கணினி, இணையம் பயன்படும் முறையை விவரிக்க.